## முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் - 2021

முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆம் திகதிய எஸ்எல்-பி116 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஜஜஜ ஆம் உறுப்புரையிலுள்ள 4 ஆம் பிரிவின் 6(ஆ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. அடிப்படை உட்கட்டமைப்பை முன்னேற்றுவதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 20,622 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 15,409 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 17,185 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 12,957 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,437 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 2,452 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூலை 07 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 29 திசெம்பர் 2016 ஆம் திகதிய 30.்.2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரிவு 3.1 | 10 வாகனங்களின் எரிபொருள் நுகர்வினை ஒக்டோபர் 2019 இல் பரிசோதிக்கப்பட்டதன் பிற்பாடு 31 திசெம்பர் 2021 வரை பரிசோதிக்ப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | எரிபொருள் நுகர்விற்காக பொருத்தமான கட்டுப்பாட்டினை கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

#### 3.1.1 வடிவமைப்பு மற்றும் ஆலோசகர்கள் மேற்பார்வையின் செயலாற்றல்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | எடுத்துச்செல்லக்கூடிய நீருக்காக ஆலோசனை நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி தொகுதி-01 இன் கீழ் 25 உப செயற்திட்டங்களும் தொகுதி-02 இன் கீழ் 14 உப செயற்திட்டங்களும் பெறுகையை முறையே ஒக்டோபர் 2020 மற்றும் ஏப்ரல் 2021 இன் இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும், தொகுதி-01 இன் கீழ் 06 உப செயற்திட்டங்களும் தொகுதி-02 இன் கீழ் 11 உப செயற்திட்டங்களும் பெறுகையை 31 திசெம்பர் 2021 வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் அடிப்படை ஆய்வினை மாத்திரம் கொண்டு ஆலோசனை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நடைமுறை சூழ்நிலை அடிப்படையில் ஆரம்ப வேலைத்திட்டம் மாற்றப்பட்டது. எனினும், தாமதமாகவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டமானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆலோசனைப் பணியை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு முன்பாக மாதாந்தம் செய்யப்பட்ட வேலைகளை அணுகுவதற்கு முறைமையினை இசைவாக்கப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | கிராமப்புற வீதிகள் மற்றும் நீர்ப்பாசனங்களுக்காக ஆலோசனை நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி கட்டம்-01 இன் கீழ் அனைத்து உப செயற்திட்டங்களினுடைய பெறுகை யூலை 2020 இறுதிக்கு முதல் பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும், கட்டம்-01 இன் கீழ் 08 உப செயற்திட்டங்களினுடைய பெறுகை 31 திசெம்பர் 2022 வரை செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால், இது இலக்கினை அடையவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (இ) கட்டம் 02 - கிராமப்புற வீதிகள் மற்றும் நீர்ப்பாசனங்களின் கீழ் 105 உப செயற்திட்டங்களினுடைய பெறுகை ஏப்ரல் 2020 இறுதியில் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தும் 53 உப செயற்திட்டங்கள் மாத்திரமே 31 திசெம்பர் 2021 இன் உள்ளவாறு கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. எனவே, 50 சதவீதம் மாத்திரமே கட்டம்-02 இன் செய்முன்னேற்றமாக இருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) கட்டம் 03 - கிராமப்புற வீதிகள் மற்றும் நீர்ப்பாசனங்களின் கீழ் 96 உப செயற்திட்டங்களினுடைய விலைமனு ஆவணங்கள் ஆகஸ்ட் 2021 இறுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் 02 உப செயற்திட்டங்கள் மாத்திரமே 31 திசெம்பர் 2021 இன் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனவே, 02 சதவீதம் மாத்திரமே கட்டம்-03 இன் செய்முன்னேற்றமாக இருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) இரு ஆலோசனை நிறுவனத்தின் செயன்முன்னேற்றம் போதாமையாக இருந்தும் கிராமப்புற வீதிகள் மற்றும் நீர்ப்பாசன ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா. 754.8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், குடிநீர் உப செயற்திட்டங்களின் 46.6 சதவீதம் ரத்து செய்தும் குடிநீர் ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா. 368.8 மில்லியன் அல்லது மொத்த செயற்திட்ட கிரயத்தில் 60 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட வேலைத்திட்டத்திற்கு அமைவாக எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் 50மூ சதவீதமும் உண்மையான செயன்முன்னேற்றம் 40மூ சதவீதமும் 31 திசெம்பர் 2021 இல் உள்ளவாறு இருந்தது. செய்யப்பட்ட பணிக்கு அமைவாக கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- |

### 3.1.2 உப செயற்திட்டங்களின் செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்ட விஞ்ஞாபனத்துடன் இணைக்கப்பட்டுள்ள அமுலாக்கல் அட்டவணையின் பிரகாரம் இச்செயற்திட்டத்தின் கீழ் 418 உப செயற்திட்டங்களின் நிர்மான பணிகள் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், எடுத்துச்செல்லும் நீர் வழங்கல் செயற்திட்டங்களின் 34 நிர்மான பணிகள், 21 கிராமப்புற வீதி உப செயற்திங்கள் மற்றும் 14 நீர்ப்பாசன நீர் வழங்கல் செயற்திட்டங்கள் (மொத்தம் 79) பல்வேறு காரணங்களினால் 31 திசெம்பர் 2021 இல் உள்ளவாறு கைவிடப்பட்டன. ஆரம்ப வேலைத் | கொவிட் 19 பரவல் நிலை மற்றும் ஏனைய தவிர்க்க முடியாத காரணங்களினால் வேலைத்திட்டம் மாற்றப்பட்டது. | செயற்திட்ட பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

திட்டத்திற்கு அமைவாக கட்டம் 01 இன் கிராமப்புற வீதிகள் மற்றும் நீர்ப்பாசனத்தின் 109 உப செயற்திட்டங்களின் நிர்மானம் நவம்பர் 2021 இறுதிக்கு முன்பாக பூர்த்தி செய்ய வேண்டியிருந்தும் 21 உப செயற்திட்டங்கள் மாத்திரமே திசெம்பர் 2021 இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டன.

### 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இச்செயற்திட்டத்தின் இரு ஆலோசனை நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட வெற்றிடமான முக்கிய நிபுணர்கள் மற்றும் முக்கிய நிபுணர்கள் பதவிகள் உடனடியாக நிரப்பப்பட்டிருக்கவில்லை என்பதுடன் சில வெற்றிட பதவிகளை நிரப்புவதற்கு 34 நாட்கள் தொடக்கம் 32 மாதங்கள் வரை எடுக்கப்பட்டிருந்தன. | ஆலோசனை நிறுவனத்திற்கு இணைக்கப்பட்டுள்ள முக்கிய வல்லுனர்கள் அவ்வப்போது விலகினர் என்பதுடன் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் படி பதிலால்களை ஆட்சேர்ப்பு செய்வதாயினும் 30 தொடக்கம் 60 நாட்கள் வரை தேவைப்படும். தலைமை அலுவலகத்தின் உதவியுடன் தரத்தில் எவ்வித மாற்றமில்லாது நடவடிக்கைகளை பேணுவதற்கு முறைமையொன்றை தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டதன் படி வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு தேவையான மதிப்பீடுகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சம்பள சீராக்கங்கள் தவறாக செய்யப்பட்டுள்ளதுடன் 09 மாத சேவை பூர்த்தியில் அனைத்து நிபுணர்களுக்கும் சம்பள அதிகரிப்பு கொடுப்பனவு காரணமாக கிராமப்புற வீதிகள் மற்றும் நீர்ப்பாசனத்துடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் நிபந்தனை 6.2(இ) இனை கருத்திற்கொள்ளாது மேலதிக கொடுப்பனவு ரூபா. 3.8 மில்லியன் ஆலோசனை நிறுவனத்திற்கு செப்தெம்பர் 2021 வரை செலுத்தப்பட்டுள்ளது. | மேலதிக விசாரணைகளுக்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்திய தொகை மீளப்பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அளவீடு, வடிவமைத்தல், தொகை மற்றும் கிரய மதிப்பீடு, அமுலாக்கல் அட்டவணை உட்பட தள கணக்கெடுப்பின் அடிப்படையிலான விரிவான வடிவமைப்பினை ஆலோசகர் விருத்தி செய்வார் எனினும் 37 ஒப்பந்த பொதிகளுக்காக மொத்தம் ரூபா. 31.4 மில்லியன் அமைத்தல், குறுக்கு பிரிவு கணக்கெடுப்பு மற்றும் வரைதலுக்காக செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளதுடன் கூறப்பட்ட பணிக்காக தொத்தம் ரூபா. 19.6 மில்லியன் ஒப்பந்தக்காரர்களுக்கு 31 திசெம்பர் 2021 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டுள்ளன. அதன்படி, ஒரே சேவையை வழங்குவதற்காக இரண்டு தரப்பினர்களுக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | ஆலோசகர் அவர்களின் விசாரணைகள் போன்ற நிதி முன்மொழிவில் வீதி வடிவமைப்பிற்காக எவ்வித விசாரணைக் கிரயத்தை உள்ளடக்கவில்லை என்பதுடன் சிவில் பணிகள் ஒப்பந்தத்தில் தரவு சேகரிப்பினை உள்ளடக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. | உடன்பட்ட வேலையை ஆலோசகரால் செய்யப்பட வேண்டும் என்பதுடன் இதற்காக ஒப்பந்தக்காரர் செலுத்தப்பட வேண்டியதில்லை. |
| (ஈ) | மொத்த செலவாக காப்புறுதி செலவினத்தின் மீது மேலதிக கொடுப்பனவு ரூபா. 9.48 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டுள்ளது.. | விலைமனுக்கள் ஏற்பாடுகளை சமர்ப்பிக்கும் போது காப்புறுதி மொத்த தொகையாக கருதப்பட்டது. | மேலதிக கொடுப்பனவை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்திற்கு முகாமைத்துவ உதவியாளராக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சின் மேலதிக செயலாளருக்கு (செயற்திட்டம்) 2017 இல் நியமன திகதியிலிருந்து தனிப்பட்ட உதவியாளராக இணைக்கப்பட்டுள்ளார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளருக்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் மொத்தம் ரூபா.1.5 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | முகாமைத்துவ உதவியாளர் சார்பாக ஜேஐசிஏ செயற்திட்டங்களுடன் அனுபவமுள்ள அமைச்சுக்கு சேவை புரியும் உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டார். | இந்நியமனத்தை முடிவுறுத்துவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |